செய்தி வெளியீடு எண்:860 நாள்:10.10.2021

**இன்று (10.10.2021) சென்னையில், தி டைம்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தி டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழின் "Merchants of Madras" என்ற புதிய வாராந்திர பக்கத்தை வெளியிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.**

உங்கள் அனைவருக்கும் அன்பான காலை வணக்கம்!

டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழின் சார்பில் நடைபெறக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே நானும் கலந்துகொண்டு உங்களிடத்திலே ஒரு சில வார்த்தைகளை எடுத்துச் சொல்லக்கூடிய வாய்ப்பினை பெற்றமைக்கு இந்த வாய்ப்பினை வழங்கியிருக்கக்கூடிய இந்த நாளிதழின் ஆசிரியர் திரு.அருண் ராம் அவர்களுக்கும், ஆசிரியர் குழுவிற்கும் எனது நன்றியை மீண்டும் ஒருமுறை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008 - ஆம் ஆண்டு ஏப்ரல் 13 - ஆம் தேதி டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ் சென்னை பதிப்பு தொடங்கப்பட்டது. அதை தொடங்கி வைத்தவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவரால் தொடங்கி வைக்கப்பட்ட நேரத்தில் நானும் கலந்துகொண்டவன் என்ற உரிமை எனக்கு இருக்கிறது. அப்போது முதலமைச்சரோடு நானும் பங்கெடுத்த நினைவுகள் மறக்க முடியாதவை ஆகும்.

குத்துவிளக்கு ஏற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்த்தி பேசுகிறபோது சொன்னார் "டைம்ஸ் ஆப் இந்தியா என்பது என்னைக் கவர்ந்த பெயர்" என்று குறிப்பிட்டு சொன்னார். "வாழ்க... வளர்க!" என்று வாழ்த்தினார்.

நீங்கள் வளர்ந்திருக்கக்கூடிய காரணத்தால்தான் 13 ஆண்டுகள் கழித்து என்னை இந்த நிகழ்ச்சிக்கு வரவழைத்து இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டியிருக்கிறீர்கள்.

எப்படி சென்னையில் தொடங்கப்பட்டபோது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்த்திச் சொன்னாரோ அதை இப்போது நானும் வாழ்த்தி சொல்லுகிறேன் ‘‘டைம்ஸ் ஆஃப் இந்தியா’’ வாழ்க... வளர்க! என்று நான் வாழ்த்துகிறேன்.

1838 - ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பத்திரிக்கை டைம்ஸ் ஆஃப் இந்தியா.

183 ஆண்டுகளாக வெளிவந்துக்கொண்டிருக்கிறது.

183 ஆண்டுகள் ஒரு நாளிதழ் வெளிவருவது என்பது சாதாரண விஷயமல்ல. அது பத்திரிக்கை நடத்துபவர்களுக்குத்தான் தெரியும்.

நாங்களும் முரசொலி நாளிதழை நடத்திக் கொண்டிருக்கிறோம். நாளிதழ் என்பதால் ஒவ்வொரு நாளும் அதனைக் கொண்டு வருவது எவ்வளவு சிரமமான காரியம் என்பது மறந்துவிட முடியாது.

அச்சுத்தொழில் என்பது மற்ற தொழில்களைப் போலக் கிடையாது.

அச்சுத்தொழில் என்ற சொன்னாலே அது நச்சுத் தொழில் என்று அந்தக் காலத்திலே சொல்வார்கள். ஆனாலும் அச்சுத்தொழிலில் ஆர்வமாக இருப்பவராக இருந்தால், எவ்வளவுதான் சிரமம் இருந்தாலும் அந்தத் தொழிலை அவர்கள் விட்டு விட்டு சென்றுவிட மாட்டார்கள்.

வைராக்கியமாக நடத்துவார்கள்.

இலாப-நஷ்டம் பார்க்காமல் அச்சுத் தொழிலை நடத்துவார்கள்.

அச்சுத்தொழிலுக்கு அத்தகைய ஒரு மயக்கம் இருக்கும்.

எவ்வளவுதான் சிரமம் கொடுத்தாலும் ஒரு நாளிதழ் அச்சடித்து வரும்போது அதை பார்க்கும் ஆர்வமே தனியானது.

என்னுடைய பள்ளிக் காலமாக இருந்தாலும் சரி கல்லூரி காலமாக இருந்தாலும் முரசொலி நாளிதழில் வேலை பார்ப்பதை நான் வழக்கமாக தான் வைத்துக்கொண்டிருந்தேன்.

மாலை நேரங்களில் அச்சடித்து வரும் இதழ்களை எடுத்துச் சென்று வெளியூர்க்கு அனுப்புக்கூடிய அந்த பொறுப்பை நான் அன்றைக்கு ஏற்றுக்கொண்டிருந்தேன்.

முதலமைச்சராக ஆனபிறகு முரசொலிக்கு நான் அடிக்கடி செல்லக்கூடிய வாய்ப்பு பெறாவிட்டாலும் வாய்ப்பு, நேரம் கிடைக்கும் போதெல்லாம் இப்போதும் நான் சென்று கொண்டிருக்கிறேன். நாளைய தினம் பத்திரிகையில் என்ன செய்தி வரப்போகிறது என்பதை அறிந்து, புரிந்து அதற்கான பணியில் நான் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன். ஆகவே தொடர்ந்து முரசொலி அலுவலகத்திற்கு தினம் தினம் போக முடியாவிட்டாலும் அவ்வப்போது வாய்ப்பு கிடைக்கும் போது, இன்றைக்கும் நான் சென்று கொண்டுத்தான் இருக்கிறேன்.

இதை எல்லாம் நான் சொல்வதற்குக் என்ன காரணம் கேட்டீர்கள் என்றால் - இந்த நிகழ்ச்சிக்கு முதலமைச்சராக மட்டுமல்ல - ஒரு பத்திரிக்கையாளராகவும் வந்து வாழ்த்த வந்திருக்கிறேன். அதில்தான் எனக்கு பெருமை.

ஆங்கிலம் உலகம் முழுவதும் பரவிய மொழியாக இருந்தாலும் இந்தியாவில் இருந்து வெளியாகக்கூடிய டைம்ஸ் ஆஃப் இந்தியாதான் உலகம் முழுவதும் அதிகம் வாசிக்கப்படக்கூடிய ஆங்கில நாளேடாக இருப்பது உள்ளபடியே பாராட்டக்கூடிய ஒன்று. இது ஏதோ உங்கள் நிறுவனத்துக்கு கிடைத்திருக்கக்கூடிய பெருமை மட்டுமல்ல - இந்தியாவுக்கே கிடைத்திருக்கக்கூடிய பெருமையாக நான் கருதுகிறேன்.

உலக மொழியில் ஒரு நாளிதழை மற்ற நாடுகளை விட அதிகமாக விற்க முடியும். அதற்கு எடுத்துக்காட்டுதான் உங்களது மகத்தான சாதனை!

எப்போதும் வண்ணமயமானதாக - பல்சுவை நிரம்பியதாக - அனைத்துத் துறையைச் சார்ந்த தகவல்களையும் மொத்தமாகக் கொடுப்பதாக டைம்ஸ் ஆஃப் இந்தியா இருக்கிறது.

அதனால்தான் அனைத்துத் தரப்பினரது ஆதரவை அது பெற்றுள்ளது.

கல்வி, மருத்துவம், சினிமா, மகளிர், கலைகள் வரிசையிலே வர்த்தகம் - தொழில் தொடர்பான செய்திகளை வழங்குவதற்காக மெர்ச்செண்ட்ஸ் ஆஃப் மெட்ராஸ் என்ற ஒரு புதிய பகுதியை தொடங்கி இருப்பதை கண்டு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

அதிலும் குறிப்பாக தமிழ்நாடு தொழில்துறை குறித்த செய்திகள் அதில் அதிகம் இடம்பெறும் என்பதை அறிந்து இன்னும் அதிகமாக மகிழ்ச்சியடைகிறேன்.

தொழில்துறை என்று போட்டு வடமாநிலச் செய்திகளையே அதிகம் போட்டுவிடாமல் தமிழ்நாடு குறித்த செய்திகள் அதிகமாக இருக்க வேண்டும், என்னுடைய வேண்டுகோளாகவும் நான் இங்கே எடுத்து வைக்கிறேன், அப்படிதான் இருக்க போகிறது.

புதிய அரசு அமைந்த பிறகு எத்தனையோ முன்னெடுப்புகளை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம்.

இதில் முக்கியமானது இந்த மேடையில் அமர்ந்திருக்கும் திரு.எஸ்.நாராயண் அவர்கள், அவர் உட்பட முக்கியமான ஐந்து ஆளுமைகளைக் கொண்டு பொருளாதார ஆலோசனைக் குழுவை நியமித்திருக்கிறோம் என்பது உங்களுக்கு தெரியும்.

இந்தியாவில் எந்த மாநிலமும் அமைக்காத ஆலோசனைக் குழு தமிழகத்தில் மட்டும்தான் அமைக்கப்பட்டிருக்கிறது என்று பல்வேறு பத்திரிகைகள் பாராட்டி எழுதியிருக்கின்றனர்.

பேராசிரியர் திரு.ரகுராம் ராஜன் அவர்கள் - இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்தவர்!

திரு.எஸ்தர் டஃப்லோ அவர்கள் - உலகத்தின் உயரிய நோபல் பரிசு பெற்றவர்!

திரு.அரவிந்த் சுப்பிரமணியம் அவர்கள் - ஒன்றிய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக இருந்தவர் !

திரு.ஜான் ட்ரீஸ் அவர்கள் - பொருளாதார நிபுணர், அமர்த்தியா சென்னுடன் இணைந்து புத்தகம் எழுதியவர்!

திரு.எஸ்.நாராயண் அவர்கள் - ஒன்றிய அரசின் நிதிச் செயலாளராக இருந்தவர். கடந்த 40 ஆண்டுகளாக பல்வேறு துறைகளில் திறம்பட செயல்பட்டவர் வழிநடத்தியவர்!

இவர்களைக் கொண்டு ஆலோசனைக் குழு அமைத்துள்ளோம்.

திரு.எஸ்.நாராயண் அவர்கள் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுக்காட்டியுள்ளார் "கலைஞர் ஆட்சி காலமானது சமூக மாற்றத்துக்கான அடித்தளமாக கிராம அளவிலும் கூட்டுறவு மட்டத்திலும் அமைப்பு ரீதியாகவும் அமைதந்தது" என்று எழுதி இருக்கிறார்கள்.

இதுதான் "திராவிட மாடல்" என்று குறிப்பிட்டுள்ளார்!

அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி!

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி!

அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி!

இது தான் திராவிட மாடல் என்பது.

அந்த நோக்கத்துடன் தமிழ்நாடு வளர வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை! அதனை நோக்கித்தான் எங்களுடைய எல்லா திட்டமிடுதல்களும் அமைந்துகொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகமாக வேண்டும்.

வேலைவாய்ப்புகள் அதிகமாக வேண்டும்.

தனிநபர் வருமானம் அதிகமாக வேண்டும்.

மக்களின் சமூக உரிமை, சமூக சுய மரியாதை இவைகள் எல்லாம் உயர வேண்டும்.

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியாக அது அமைய வேண்டும் என்றே திட்டமிட்டு இந்த ஆட்சியை நடத்திகொண்டிருக்கிறோம்.

தமிழ்நாடு அரசு 5 லட்சம் கோடி கடனில் இருக்கிறது.

பொதுத்துறை நிறுவனங்கள் 2 லட்சம் கோடி கடனில் இருக்கிறது.

நிதி ஆதாரம் என்பது விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில துறைகளின் மூலமாக மட்டும்தான் வருகிறது.

வரி வசூலில் இருந்த மாநில உரிமைகளை ஒன்றிய அரசு ஜி.எஸ்.டி. மூலமாக பறித்துவிட்டது. அதனால் வரி வசூலை நம்ப முடியாது.

நமது வளத்தை கொண்டு நாம் நம்மை வளப்படுத்திக் கொள்ளும் நிலைமையில் இருக்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்த இந்த நான்கு மாத காலத்தில் - தொழில்துறை புத்துணர்வு அடைந்துள்ளது.

இரண்டு முக்கியமான மாநாடுகளை அரசு நடத்தியிருக்கிறது.

'முதலீட்டாளர்களின் முதல் முகவரி' - தமிழ்நாடு என்ற மாநாட்டை சென்னையில் நடத்தினோம்.

மிக முன்னணி நிறுவனங்கள் பங்கேற்ற மாநாடு அது.

தெற்காசியாவிலேயே தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்துவதே எனது இலட்சியம் என்று அந்த மாநாட்டில் நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

அதற்காக தொழில்புரிவதை எளிமை ஆக்க ஒற்றைச் சாளர முறை – **Single Window System** இணையதளம் 2.0-வை நான் தொடங்கி வைத்தேன்.

புதிய தொழில்களை தமிழ்நாட்டை நோக்கி ஈர்க்க வேண்டுமானால் உள்கட்டமைப்பை உலகத் தரம் வாய்ந்ததாக அமைக்க வேண்டும். அதற்கான பணிகளையும் நாங்கள் தொடங்கி இருக்கிறோம்.

அந்த மாநாட்டில்தான் புதிய தொழில்கள் தொடங்குவதற்கு 35 நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டது. முதன் முதலாக 17,141 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டது. இதன்மூலமாக 55 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க இருக்கிறது.

அடுத்ததாக சில வாரங்களுக்கு முன்னால் ஏற்றுமதி தொடர்பான ஒரு மாநாட்டைச் சென்னையில் நடத்தினோம்.

"ஏற்றுமதியில் ஏற்றம் - முன்னணியில் தமிழ்நாடு" என்று அந்த மாநாட்டுக்குத் தலைப்பு கொடுத்து இருந்தோம். அன்றைய தினம் 2,180 கோடி ரூபாய் மதிப்பிலான 25 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இதன் மூலமாக 42 ஆயிரத்து 145 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது.

இப்படி பல்வேறு நிறுவனங்கள் தொடங்க இருக்கின்றன.

1.93 இலட்சம் கோடி ரூபாய் ஏற்றுமதியுடன், இந்தியாவிலேயே, தமிழ்நாடு மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாக விளங்கி வருகிறது. இதனை முதலிடத்துக்கு கொண்டு வருவதற்கு அதற்கான முழுமூச்சில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

அதற்காக தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கையை வெளியிட்டு இருக்கிறோம்.

மாநில ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

சிறுகுறு மற்றும் நடுத்தர ஏற்றுமதி நிறுவனக் கையேட்டையும் வெளியிட்டு உள்ளோம்.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களும் அதிகமாக வேண்டும்.

ஏற்றுமதி ஆகும் பொருள்களும் அதிகமாக வேண்டும்.

அதற்கான அனைத்து திட்டமிடுதல்களையும் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது.

இத்தகைய சூழலில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் - மேன்மைக்குமான வழிகாட்டியாக டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் பக்கங்கள் அமைய வேண்டும் என்று நான் உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தமிழ் மக்களின் பணத்தால் நடக்கும் பாரம்பரிய பத்திரிக்கை ஒன்று, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு பலரும் தயங்குகிறார்கள் என்று தனது கெட்ட எண்ணத்தை செய்தியாக கட்டுரையாக இரண்டு தினங்களுக்கு முன்னால் வெளியிட்டுள்ளது. அதுபோன்று நீங்கள் செயல்பட மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

அனைத்துத் தொழில்களும் தொடங்குவதற்கான சாதகமான சூழல் தமிழ்நாட்டில் உண்டு என்பதை நீங்கள் கட்டுரைகளாக வெளியிட வேண்டும்.

தமிழ்நாட்டில் இயற்கைச் சூழல் அனைத்துத் தொழில்களுக்கும் இடமளிப்பதாக இருக்கிறது.

மனித வளம் என்பதும் சிறப்பானதாக இருக்கிறது.

தமிழ்நாட்டின் ஆட்சி மற்றும் அரசியல் சூழலும் மாறி இருக்கிறது என்பதை இந்தியாவுக்கு மட்டுமல்ல உலக நிறுவனங்களுக்கும் சொல்ல வேண்டிய கடமை டைம்ஸ் ஆஃப் இந்தியா போன்ற ஆங்கிலப் பத்திரிக்கைகளுக்கு உண்டு.

கொரோனாவைக் கட்டுப்படுத்தியதில் தொடங்கி - தமிழக வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பது வரை இந்தியாவின் கவனத்தை இன்றைய தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. இந்த வெற்றிகரமான நடவடிக்கைகளை இந்தியா முழுமைக்கும் கொண்டு செல்லுங்கள். அரசைப் பாராட்டி எழுதுங்கள் என்று நான் கட்டளை போடவில்லை. விமர்சனங்கள் வையுங்கள். அதனை ஏற்றுக்கொள்ள திறந்த மனத்தோடு தயாராக இருக்கிறோம்.

என்னுடைய வருத்தமெல்லாம் சிறு தவறு நடக்கும்போது அதனை பெரிதாக விமர்சிக்கும் சில பத்திரிகைகள் - பெரிய நன்மைகளைச் செய்யும்போது சிறு அளவில் கூட பாராட்டுவது இல்லையே என்பதுதான் என்னுடைய வருத்தம்.

பாராட்ட வேண்டியதற்கு பாராட்டுபவருக்குதான் திட்டுவதற்கான உரிமையும் இருக்கிறது என்பதை அனைத்து ஊடகங்களும் மறந்துவிட வேண்டாம் என்று அனைத்து ஊடகங்களுக்கும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"**காரிருள் நீக்கும் கதிரொளியாகச் செயல்படுங்கள்**" என்று டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் சென்னைப் பதிப்பை தொடங்கி வைத்து பேசும் போது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.

அனைத்து ஊடகங்களும் அப்படிச் செயல்பட வேண்டும் என்பதை இந்த விழாவின் மூலமாக என்னுடைய வேண்டுகோளாக நான் எடுத்து வைக்க கடமைப்பட்டுள்ளேன்.

200-ஆவது ஆண்டுவிழாவை நோக்கி நெருங்கி வரும் டைம்ஸ் ஆஃப் பல்லாண்டுகள் பரவி நின்று தமிழ்நாட்டின் புகழை இந்தியாவுக்கு, உலகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று நெஞ்சார மனதார தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் வாழ்த்தி விடைபெறுகிறேன்!

நன்றி! வணக்கம்!

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ்நாடு பொருளாதார ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், முன்னாள் ஒன்றிய நிதிச் செயலாளருமான திரு. எஸ். நாராயண், தி டைம்ஸ் ஆப் இந்தியா ரெசிடெண்ட் எடிட்டர் திரு. அருண் ராம், பிசினஸ் எடிட்டர் திரு. ராஜேஷ் சந்திரமௌலி, உதவி துணைத் தலைவர் மற்றும் மெட்ரோ தலைவர் திரு. மணிகண்டன் நாயர், Zoho கார்ப்பரேஷன் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு. ஸ்ரீதர் வேம்பு, Roca Parryware நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திரு.ரங்கநாதன் மற்றும் தொழில் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9